கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது தகவல் கொடுத்திருக்கிறேன். தொழிலாளர்கள் என்ன சொன்னாலும் என்னிடமுள்ள தகவலைக் கொடுத்திருக்கிறேன்.

இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை

* 258 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மெஷின் கருவிகள் தொழிற்சாலை நிறுவுவதற்கு என்னென்ன அடிப்படை ஏதுக்கள், சாதனங்கள் தேவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The following are the basic criteria for starting a Machine Tool Factory :—

About 30 to 50 acres of land,

About 2 lakh gallons of water per day,

About 5,000 KVA of Power,

Transport facilities like Railway connection, highways,

Nearness to a Sea Port and Air-Port,

Proximity to facilities for castings, forgings, machining, flame hardening, melting finishing, heat treatment, etc.,

Proximity to the consuming centre, and

Proximity to a number of engineering industries.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நம் ராஜ்யத்தில் அதை எங்கேயாவது நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? அதற்கு வெளியார் உதவி ஏதாவது இருக்கிறதா ? உத்தேச எஸ்டிமேட் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Madras State Industrial Corporation, இன்டஸ்ட்ரியல் லைசென்ஸுக்கு Government of India -க்கு அப்ளை செய்திருக்கிறது. இந்த அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது.

Marine Engineering College

* 259 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any representation from one Sri Arumugasamy Nadar of Tuticorin for starting a Marine Engineering College in Tuticorin during 1963, 1964 and 1965;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) the details of offer made by the said Sri Arumugasamy Nadar, for the purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) No action is possible in the matter since no decision has been taken to open an Engineering College in the district.

(*c*) Properties worth about Rs. 5 lakhs and fetching an annual income of about Rs. 20,000 were promised as donation for the College.

9th August 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : கப்பற் பொறியியல் கல்லூரி நிறுவ உத்தேசமாக எவ்வளவு செலவிடப்பட வேண்டியதிருக்கும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா ? என்ஜினியரிங் கல்லூரி நிறுவும்போது ஒரு பகுதியாக இத்தகைய பொறியியல் கல்லூரியையும் வைத்துக்கொள்வது என்பது சர்க்கார் ஆலோசனையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக்கேள்வி வேண்டும்.

பொற்கொல்லர்கள்

*260 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்கு, தொழில் செய்வதற்காக வழங்கப்பட்ட கடன்களுள், தொழிலை மாற்றிக் கொண்டதன் காரணமாக பணத்தைத் திரும்பக் கட்டுமாறு எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

(இ) பெற்ற கடன் தொகையை மாற்றிக்கொண்ட தொழிலுக்கே கொடுத்ததாக பாவிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா ?

(உ) இல்லையெனில், பல தவணைகளில் வசூலிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Eight persons.

(*b*) No; Sir.

(*c*) Loans which are not utilised for the specific purpose for which they were sanctioned will be foreclosed and the entire dues to Government are liable to be summarily recovered in such cases.

திரு. வை. சங்கரன் : விலைவாசி காலநிலை காரணமாக இந்தக் கடன் தொகையிலிருந்து எடுத்து வேறு தவறுகச் செலவழித்து விடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமையை அனுசரித்து, இப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது சலுகை அளிக்க சர்க்கார் முன் வருமா ? 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிலைமை எவ்வளவு தான் கெட்டுப்போயிருந்தாலும், ஒரு தொழிலுக்கு என்று கடன் வாங்கி அதை வேறு விதமாகச் செலவு செய்வது என்பது சர்க்கார் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், ஆரம்ப காலத்தில் குறிப்பிட்ட தொழிலுக்கு என்று கடனை வாங்கி, பின்னுல் வேறு ஒரு தொழிலுக்கு உபயோகித்தால், கடன் வாங்கிய முழு தொகையையும் ஏக காலத்தில் திருப்பிக் கட்டவேண்டும் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி கடன் தொகையை தவணைகளாக திருப்பி செலுத்தலாம் என்றும், வேறு தொழிலுக்கு மாற்றிக்கொள்ளலாம் என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?